தினமலர்
பெண்கள் மலர்
டிசம்பர் 1, 2018
நாளிதழுடன் இணைப்பு










# ஆன்லைனில் நகை விற்பனை!




# சொல்லும் பாடம்!

– காம்கேர் கே. புவனேஸ்வரி.

**சமீபத்தில் வெளியான ராதாமோகன் இயக்கத்தில் ஜோதிகா நடித்த 'காற்றின் மொழி' படம் பார்த்தேன். வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பல விஷயங்கள் இந்தப் படத்தில் இடம் பெற்றிருந்தது.**

★ ''இரவு நேரப் பணிக்குச் செல்ல வேண்டாம்'' என்று அக்காக்களும், அப்பாவும் அறிவுரை சொல்ல அதை அவள் மறுக்க ''ஏதாவது பிரச்னைன்னா எங்கக் கிட்ட தானே வந்து நிற்பாய்'' என்று அவர்கள் கண்டிப்புடன் சொல்லும்போது நாயகி சொல்லும் பதில் கிளாசிக்.

''ஆமாம். நீங்க தானே என்னுடைய ஃபேமிலி. உங்கக்கிட்டத்தான் வந்து நிற்பேன்...'' இதுபோன்ற பிரச்னையில் பொதுவாக என்ன சொல்லுவார்கள் 'நான் ஏன் உங்கக்கிட்ட வரப்போறேன். செத்தாலும் உங்கக்கிட்ட வந்து நிக்க மாட்டேன்...' இதுதான் பதிலாக இருக்கும்.

ஆனால் இந்தப் படத்தில் நாயகி சொல்லும் இந்த பதிலில் குடும்ப அமைப்புக்கான அஸ்திவார நம்பிக்கை பொதிந்துள்ளது.

★ நாயகன், இரவு நேர பணிக்கு ஒத்துக் கொண்டாலும் ஆண்களின் ஏடாகூடமான கேள்விகளில் கூசிப் போகிறான். ''இந்த வேலைக்கு போய்த்தான் ஆகணுமா... நாலு பேர் என்ன சொல்வாங்க...'' என்று மனம் வருந்திப் பேச அதற்கு நாயகி,



''அவங்க எப்படிப் பேசினால் என்ன... நான் சரியாத்தானே பேசறேன்...'' என்று சொல்லும் பதிலில் உள்ள பாடம் பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களுக்கும்தான்.

ஆர்ஜே பணியில் சேர வாய்ப்புக் கேட்கும் போதாகட்டும், அதன்பின்னர் ஒரு ஜிம் விளம்பரத்தைப் பார்த்துவிட்டு அங்கு ரிசப்ஷனிஸ்ட் பணிக்கு வாய்ப்பிருக்கிறதா? என்று கேட்டுச் செல்லும் போதாகட்டும் ''என்னால் முடியும்...'' என்று கண்களில் நம்பிக்கைத் தெறிக்க பேசும் நாயகியின் வார்த்தைகளில் உள்ள தன்னம்பிக்கை நம் எல்லாருக்கும் தேவையான ஒன்று.

★ கடைசியில் குடும்பச் சூழல் காரணமாக மனதுக்குப் பிடித்த ஆர்ஜே வேலையை ரிசைன் செய்துவிட்டு அதே ரேடியோ ஸ்டேஷனில் கேட்டரிங் ஆர்டரைக் கேட்டு வாங்கும் போதும் நாயகி சொல்லும் ''என்னால் முடியும் மேடம்...'' வார்த்தையிலும், கண்களில் தெரியும் நம்பிக்கையிலும் நெகிழாதவர்கள் இருக்க முடியாது.

★ ஆணாகட்டும் பெண்ணாகட்டும் குடும்பம் என்ற அமைப்புக்குள் வந்துவிட்டால் தன் வேலையினால் அந்த குடும்ப அமைப்புக்கு பங்கம் வரும் என்றால் அதை துறக்கவும் தயங்கக் கூடாது என்று நாயகி தன் வேலையைத் துறக்கும் காட்சியை அமைத்திருக்கிறார்கள். ஆனால், அதற்காக அவர் சமையல், பாத்திரம் தேய்த்தல், துணி துவைத்தல்



என்ற குறுகிய வட்டத்துக்குள் சுருங்கி விடாமல் மீண்டும் உயிர்த்தெழுந்து கேட்டரிங் பிசினசை தொடங்குவதாகக் காண்பித்திருப்பது அருமை.

★ எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக கடைசி காட்சியில் நாயகன், நாயகியிடம் ''நான் கேட்டரிங் பிசினசை பார்த்துக் கொள்கிறேன். நீ வேலைக்குக் கிளம்பு... நீ இப்படி இருப்பதைப் பார்க்க எனக்கு கஷ்டமா இருக்கு...'' என்று சொல்லும்போது நாயகி, ''நான் சந்தோஷமாத்தான் இருக்கேன்... மறுபடியும் அந்த நிகழ்ச்சில யாராவது ஏதாவது பேசப்போக உனக்குப் பிடிக்கலைனா என்ன செய்வது...'' என்று சொல்லும்போது நாயகன் சொல்லும் பதிலில் படத்தை ஒய்யாரத்தில் தூக்கி வைத்துவிட்டார்கள்.

''யார் எப்படிப் பேசினால் என்ன... நீ சரியாத்தானே பேசுவ...''

இந்த ஒற்றை வரி கொடுக்கும் தைரியமும் மனோபலமும்தான் கணவன், மனைவிக்குள் இருக்கும் நம்பிக்கையை பலப்படுத்துகிறது.

★ இன்றைய தலைமுறைப் பிரச்னையான ஸ்மார்ட்போன், வீடியோ கேம்ஸ் இவற்றின் தாக்கங்களையும் எதார்த்தமாக எடுத்துச் சொல்லியிருப்பது பெற்றோர்களுக்கு ஒரு 'வார்னிங்' கொடுத்ததைப் போல அருமையாக உள்ளது.

★ ரேடியோ ஸ்டேஷன் ஹெட்டாக வரும் லஷ்மி மஞ்சு, ஜிம்மில் பணிபுரியும் கர்ப்பிணி பெண்ணாக வரும் மதுமிதா, ஊறுகாய் மற்றும் பொடி வகைகளை வீட்டில் தயாரித்து விற்பனை செய்யும் உமா பத்மநாபன் என்று படம் நெடுக பெண்களை தன்னம்பிக்கைப் பெண்களாகக் காட்டியிருப்பது கூடுதல் சிறப்பு.

பிறர் மீது வைக்கும் நம்பிக்கை, தன் மீது வைக்கும் தன்னம்பிக்கை - இந்த இரண்டையும் படம் நெடுக தூவிச் சென்றுள்ள 'காற்றின் மொழி' டீமிற்கு பாராட்டுகளும் வாழ்த்துகளும்.

●

## நெயில் பாலீஷ் சீக்கிரமாக காய...

நெயில் பாலீஷ் போட்டு அது காய்வதற்கு 10 நிமிடங்களாவது ஆகும். அதற்கெல்லாம் நேரமில்லை என்று பறப்பவர்கள் ஒரு கிண்ணத்தில் ஜில் தண்ணீர் விட்டு அதில் சில ஐஸ் க்யூப்புகளை போட்டு வைத்துக் கொண்டு பிறகு நெயில் பாலிஷை போடவும். ஒரு நிமிடம் கழித்து தண்ணீரில் விரல்களை இரண்டு, மூன்று நிமிடங்கள் நனைக்கவும். நிமிடங்களில் நெயில்பாலீஷ் காய்ந்துவிடும்.

